# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 8, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பொதுமக்களின் தினசரி யுபிஐ பணப் பரிவர்த்தனை களுக்கு கட்டணம் கிடையாது என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். மேலும், வணிகர்களுக்கு மட்டுமே யுபிஐ பரிவர்த்தனையில் கட்டணம் விதிப்பது குறித்துப் பரிசீலிப்பதாகவும், நுகர்வோருக்கு அது பொருந்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2. பிலிப்பின்ஸில் நடைபெற்ற ஏரோபிக் ஜிம்னாஸ்டிக்ஸ் ஆசிய சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் அரிஹா பங்கம்பம், சீனியர் மகளிர் தனிநபர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

3. ஆசிய சர்ஃபிங் சம்மேளன தலைவராக, இந்திய சர்ஃபிங் சங்கத் தலைவர் அருண் வாசு தேர்வு செய்யப்பட்டார்.

4. அமெரிக்காவில் நடைபெற்ற செயின்ட் லூயிஸ் ரேப்பிட் & பிளிட்ஸ் செஸ் போட்டியில், இந்தியாவின் ஆர்.பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்றார். இப்போட்டியில் அவர் கோப்பையைக் கைப்பற்றியது இதுவே முதல்முறையாகும்.

5. மேற்காசிய பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், பாகிஸ்தான், சவூதி அரேபியா, துருக்கி ஆகிய 3 நாடுகளும் வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.
   i. இந்த ஒப்பந்தத்தின்படி, 3 நாடுகளில் எந்தவொரு நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதலும், மற்ற நாடுகளின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதப்படும்.
   ii. சவூதி அரேபியாவின் மக்கா நகரில் உள்ள அல் ஸஃபா அரண்மனையில் நடைபெற்ற சந்திப்பில், இந்த 'மக்கா கூட்டுப் பாதுகாப்பு' ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப், சவூதி இளவரசர் முகமது பின் சல்மான், துருக்கி அதிபர் தயீப் எர்டோகன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

6. சர்வதேச விண்வெளி நிலையத்தின் (ஐஎஸ்எஸ்) மின் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனில் மேனன், ஜெசிகா மெய்ர் ஆகிய 2 நாசா விண்வெளி வீரர்கள் விண்வெளி நடையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.
   i. விண்வெளி நிலையத்தின் 'ஸ்டார்போர்ட் 6 டிரஸ்' பகுதியில் உள்ள '3பி' மின் பாதையில் புதிய சூரியமின் தகடுகளைப் பொருத்தும் நோக்கில் 'குவெஸ்ட் ஏர்லாக்' பகுதியிலிருந்து வெளியேறிய இருவரும், சுமார் 6 மணி நேரம், 27 நிமிடங்கள் விண்வெளியில் தீவிரமாகச் செயல்பட்டு அப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றினர்.
   ii. எதிர்காலத்தில், 'ஐரோசா' எனப்படும் சுருட்டப்பட்ட நிலையில் இருந்து தானாக விரிவடைக்கூடிய (ரோல்-அவுட்) சூரியமின் தகடுகளை விண்வெளி நிலையத்தில் நிறுவு தற்கு இந்த மேம்பாட்டுப் பணிகள் பெரிதும் உதவும் என்று நாசா தெரிவித்துள்ளது. கடந்த 2021 முதல் இதுவரை 6 தகடுகள் பொருத்தப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 2 தகடுகள் இந்த ஆண்டின் இறுதியில் விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்படவுள்ளன. இதனிடையே, விண்வெளி நடையின்போது நிலவைக் கண்டு வியந்த விண்வெளி வீரர்கள் இருவரும், எதிர்கால நிலவுத் தளம் தொடர்பான தங்கள் உற்சாகத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

7. அமெரிக்காவில் பிறப்புரிமை அடிப்படையிலான குடியுரிமையைக் கட்டுப்படுத்தவும், குடியுரிமை பெறும் நோக்கத்துடன் பெண்கள் கருவுற்ற நிலையில் அமெரிக்காவுக்குப் பயணிப்பதைத் தடுக்கும் வகையிலும் 2 புதிய நிர்வாக உத்தரவுகளில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கையொப்பமிட்டார்.
   i. இவ்விவகாரம் தொடர்பான டிரம்ப்பின் முந்தைய உத்தரவை அமெரிக்க உச்சநீதிமன்றம் கடந்த ஜூன் இறுதியில் ரத்து செய்திருந்த நிலையில், சில மாற்றங்களுடன் இப்புதிய உத்தரவுகள் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன.
   ii. அதன்படி, வர்த்தக ரீதியிலான ஒப்பந்தங்கள் மூலம் அமெரிக்காவில் குழந்தை பெற்றுக்கொள்பவர்கள், பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்களின் குழந்தைகள் மற்றும் வெளிநாட்டு அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கு குடியுரிமை ஆவணங்கள் மறுக்கப்படும்.
   iii. இது குறித்து அதிபர் டொனால்ட் டிரம்ப் மேலும் கூறுகையில், 'அமெரிக்காவில் பிறப்பவர்களுக்கு குடியுரிமை அளிக்கும் 14-ஆவது

அரசமைப்புச் சட்ட திருத்தம், உள்நாட்டுப் போருக்குப் பிறகு அடிமைகளின் குழந்தைகளுக்காகக் கொண்டுவரப்பட்டது; ஆனால், தற்போது அதைச் சிலர் வர்த்தக நோக்கில் பயன்படுத்துகின்றனர். உச்சநீதிமன்றத்தின் முடிவு துரதிருஷ்டவசமானது என்பதால் இப்புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன' என்றார்.

8. இணையவழி வர்த்தகம் மூலம் கைத்தறிப் பொருள்களை உலகச் சந்தையில் சேர்க்க முடியும் என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற 12-ஆவது தேசிய கைத்தறி தினக் கொண்டாட்டத்தில் பங்கேற்று அவர் பேசியதாவது:

   i. நாட்டின் கைத்தறித் துறையில் 35 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர்; அவர்களில் 25 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பெண்கள் ஆவர். நாட்டின் வளர்ச்சி மற்றும் தற்சார்புக்கான சிறந்த அடித்தளமாக தைத்தறித் துறைதிகழும் என்று நம்புகிறேன்.
   ii. கைத்தறித் துறை கணிசமான வேலை வாய்ப்புகளை அளிக்கிறது. இணைய வழி வர்த்தகம் மூலம் கைத்தறிப் பொருள்களை உலகச் சந்தையில் சேர்க்க முடியும். கைத்தறித் துறையின் நீடித்த வளர்ச்சிக்கு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம்.
   iii. பல்வேறு திறமைவாய்ந்த இளம் தொழில்முனைவோர் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்க வடிவமைப்புகளுடன் இத்துறைக்கு வந்து கொண்டிருக்கின்றனர். அரசுத் திட்டங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் இத்துறையில் இளைஞர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்க வேண்டும். அவர்களின் ஆர்வமும் திறன்களும் கைத்தறித் துறையை வெற்றிகரமானதாக மாற்றும் என்றார் அவர்.
   iv. இந்த கௌரவ விழாவில்மிக்க சந்த் கபீர் கைத்தறி விருது களையும், 2025-ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தறி விருதுகளையும் குடியரசுத் தலைவர் வழங்கினார்.
   v. கடந்த 1905-இல் சுதேசி இயக்கம் தொடங்கப்பட்ட நாளான ஆக.7-ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் தேசிய கைத்தறி தினமாக கொண்டாடப்படுகிறது. உள்நாட்டு உற்பத்தி பொருள்கள் மற்றும் தற்சார்பை ஊக்குவிப்பதே இந்த தினத்தின் நோக்கமாகும்.